அண்ணியின்
எண்ணம் எதுவோ...
காசியோ...கதிர்காமமோ அல்ல
எண்ணற்ற பொருட்களை
மலிவான விலையில்
நிறைவு செய்வதே
தேவை எதுவானாலும்
சி. சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன்: 284

பக்கங்கள் 6 விலை சதம் 40

ஈழநாடு
The EELA NADU

மலர்: 20 ஆவணி 13 றம்ழான்: 24 இதழ்: 199
யாழ்ப்பாணம் செவ்வாய்க்கிழமை 29-8-78

இத்தாலியின்
உற்பத்தி
உங்கள் சவாரிக்கு
வெஸ்பா VESPA
ஸ்கூட்டர்கள்
எதற்கும் ஒருமுறை நாடுங்கள்
சி.சின்னத்துரை அன் பிரதர்
யாழ்ப்பாணம் - போன் 284

ERSITY OF SRI LANKA
RECEIVED
-29
PERIODICALS SECTION
LIBRARY

அரசியலமைப்பு நீதிமன்ற நீதியரசர்களை

பீலிக்ஸின் தூண்டுதலினால்

கொப்பேகடுவ பயமுறுத்தினார்

ராஜினாமா செய்யுமாறு தொலைபேசியில் கூறினார்

ஜனாதிபதி கமிஷன் முன் நீதியரசர் தெஹரகொட

(கொழும்பு)

''கடந்த ஆட்சிக்காலத்தில் இருந்த அரசியல் அமைப்பு நீதிமன்றத்தில் முதலாவதாக பரிசீலனைக்கு வந்த பத்திரிகை மன்றச் சட்டமூலம் தொடர்பான தீர்ப்பை உடன் சபாநாயகருக்கு வழங்குமாறு முன்னாள் அமைச்சர்கள் திருவாளர்கள் பீலிக்ஸ் ஆர். டயஸ் பண்டாரநாயக்கா, கொல்வின் ஆர். டி. சில்வா, சபாநாயகர் திரு. ஸ்டான்லி திலகரத்தின ஆகியோர் ஜனாதிபதி மாளிகையில் வைத்து அரசியல் அமைப்பு நீதியரசர்களை வற்புறுத்தியதுடன் அப்போது அமைச்சராக இருந்த திரு. கொப்பேகடுவ, நம்மைப் பதவியிலிருந்து ராஜினாமாச் செய்யுமாறு தொலைபேசியில் பயமுறுத்தினார். திரு. பீலிக்ஸின் தூண்டுதலின் பேரிலேயே அவர் அவ்வாறு பயமுறுத்தினார்''

இவ்வாறு முன்னாள் உயர்நீதி மன்ற நீதியரசரும் அரசியல் அமைப்பு நீதிமன்ற நீதியரசருமான திரு. எச். தெஹரகொட நேற்று ஜனாதிபதி ஆணைக்குழு முன்னிலையில் தெரிவித்தார்.

முன்னாள் நீதியரசர் திரு. தெஹரகொட தமது சாட்சியத்தில் மேலும் கூறியதாவது:

அரசியல்அமைப்பு நீதிமன்றத்திற்கு முதன்முதலில் பரிசீலனைக்கு வந்த பத்திரிகை மன்றச் சட்டமூலத்தைப் பரிசீலனைசெய்ய எமக்கு 14 நாட்களே தேவைப்பட்டது. இதுதொடர்பாக நாம் ஏகமனதாக முடிவுசெய்திருந்தோம்

இம் முடிவை மாற்றி சட்டமூலம் தொடர்பான தீர்ப்பை உடன் சபாநாயகருக்கு அனுப்புமாறு அரசதரப்பில் கேட்கப்பட்டிருந்தது.

அரசியல்அமைப்பு நீதிமன்ற நீதியரசர்களாக இருந்த திருவாளர்கள் ரி. எஸ். பெர்ணாண்டோ, ஏ. எல். கூரே ஆகியோருடன் நானும் அன்று மாலை ஜனாதிபதியின் மாளிகைக்கு அழைக்கப்பட்டோம்.

அங்கு அப்போதைய நீதி அமைச்சர் திரு. ஆர். பீலிக்ஸ் ஆர். டயஸ்பண்டாரநாயக்கா அரசியலமைப்பு அமைச்சர் டாக்டர் கொல்வின் ஆர். டி. சில்வா, சபாநாயகர்

(6-ம் பக்கம் பார்க்க)

சகல மக்களினாலும் அங்கீகரிக்கப்பட்ட தலைவர்

அமிரின் பிறந்த தின விழாவில் தலைவர் 'சிவா' பெருமிதம்

(யாழ்ப்பாணம்)

இளைஞர்களைப் பொறுத்தவரையில், தமிழ் ஈழத்துக்கான போராட்டத்தில் அவர்கள் தலைமைப் பீடத்தில் நம்பிக்கை வைக்கவேண்டும். அந்த நம்பிக்கை தமிழர் தலைவர் திரு. அமிர்தலிங்கத்தால் உறுதி செய்யும் வகையில் இளைஞர்கள் கட்டுக்கோப்பாக இயங்க வேண்டும்''

இவ்வாறு நேற்று முன்தினம் நடைபெற்ற திரு. அ. அமிர்தலிங்கத்தின் 51-வது பிறந்த தினவிழாவில் தமிழர்விடுதலைக் கூட்டணித் தலைவரும், நல்லூர் எம். பி.யுமான திரு. எம். சிவசிதம்பரம் கூறினார்.

யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் நடைபெற்ற இவ் விழாவுக்குத் தலைமைவகித்த திரு. எம். சிவசிதம்பரம் தொடர்ந்து உரையாற்றுமைகையில் கூறியதர்வது:-

''தமிழ் மக்களது வரலாற்றை நாம் ஆராய்ந்த பொழுது தமிழன் அடிமை நிலையில் இருப்பதை உணர்ந்தே நாம் எல்லோரும் ஒன்றுபட்டுத் . தமிழர் விடுதலைக் கூட்டணியைஉருவாக்கினோம். இன்று அமிர்தலிங்கம் தமிழர் தலைவராக மட்டுமல்ல இந்த நாட்டில் வாழ்கின்ற பெரும்பான்மையினரால் அங்கீகரிக்கப்பட்ட தலைவராகவும் விளங்குகின்றார்.

விடுதலையே இலக்கு

''தமிழர்விடுதலைக்கூட்டணி பழைய அடிப்படையில் உருவாகினாலும், தமிழ் மக்களின் விடுதலை ஒன்றையே இலக்காகக் கொண்டு ஒன்றுபட்டு புதியபாதையில் செல்கின்றது. இப்பணியைத் தொடர்ந்து மேற்கொள்ள தமிழர் தலைவர் அமிர்தலிங்கத்திற்கு நீண்ட ஆயுளைக் கொடுக்க வேண்டுமென நாம் இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

விழாவில் பெருந்தொகையானோர் திருவாளர் அமிர்தலிங்கத்துக்கும் அவரது துணைவியர் திருமதி அமிர்தலிங்கத்துக்கும் மாலை அணிவித்தனர்.

அமிர்தலிங்கம் சிறப்புமலரினை வெளியிட்டு உரையாற்றிய செந்தமிழர் இயக்க செயலாளர் திரு. வி. பொன்னம்பலம் கூறியதாவது:

'திரு. அமிர்தலிங்கம் தமிழ் ஈழத்தை மீட்டெடுக்கும் போராட்டத்தில் உலகிலுள்ள சோஷலிஸ நாடுகளுடன்

(6-ம் பக்கம் பார்க்க)

இணுவில் ஸ்ரீபரராஜசேகரப் பிள்ளையார் கோயில்
இராஜகோபுரக் கும்பாபிஷேக
7வது ஆண்டுத் திருவிழா
சூலமங்கலம் சகோதரிகளின்
இன்னிசை விருந்து
இடம்: இணுவில் ஸ்ரீபரராஜசேகரப்
பிள்ளையார் கோயில்
காலம்-நேரம்: 30-8-78 புதன்கிழமை
இரவு 10-00 மணி
இலங்கை போக்குவரத்துச் சபையால்
விஷேச பஸ்சேவை ஒழுங்கு செய்யப்பட்டுள்ளது.
0111

தமிழரசுக் கட்சியின் சமஷ்டிக் கொள்கையினால் 58-ல்

தமிழர் கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கையினால் 77-ல்

கலவரங்கள் பற்றி சன்சோனி கமிஷன் முன் தேரோ

(கொழும்பு)

தமிழரசுக்கட்சியின் சமஷ்டிக் கோரிக்கையினால் 1958-ம் ஆண்டு இனக்கலவரம் தோன்றியது. மீண்டும்கடந்த வருடம் ஆகஸ்ட்மாதம் தமிழர் விடுதலைக்கூட்டணியின் தனிநாட்டுக் கோரிக்கையினால் இனக்கலவரம் தோன்றியது. இக்கலவரங்களினால் வீணாகப் பல உயிர்கள் பலியாகின.

இவ்வாறு யாழ். நாக விகாரை பிரதமகுரு வண. கடவத்துவ நந்தாராம நாயக்கதேரோ நேற்று சன்சோனிக் கமிஷன் முன்னிலையில் சாட்சியமளிக்கையில் கூறினார்.

தமிழ்அகதிகள் புனர்வாழ்வுக்கழகத்தின் ஆதரவில் கமிஷன் முன் ஆஜரான சட்டத்தரணி திரு. அண்டலூட் மணிவாசகம் சாட்சியை குறுக்குவிசாரணை செய்தார்.

வணதேரோ குறுக்குவிசாரணையின்போது மேலும் கூறியதாவது:

'யாழ்ப்பாணத்தில் இராணுவ முகாம் ஒன்றை அமைக்கும் பட்சத்தில் பலவிஷயங்களிலும் நன்மை உண்டு. இராணுவத்தினர் அமைதியுடன் மக்களையும் அரசையும் காப்பாற்றுவர்.

சட்: இராணுவத்தினர் துப்பாக்கியினால் அமைதியை ஏற்படுத்துவார்.

சாட்சி; ஆம். யாழ்ப்பாணத்தில் மட்டுமல்ல நாட்டின் முக்கிய இடங்களிலும் இராணுவ முகாம்கள் அமைக்கப்படவேண்டும்.

(6-ம் பக்கம் பார்க்க)

விசேட பொலிஸ் குழு

(மாவிட்டபுரம்)

காங்கேசன்துறைப்பொலிஸ் பகுதியிலுள்ள சங்கக்கடைகளை கண்காணிக்க விசேடபொலிஸ் குழு ஒன்று நியமிக்கப்பட்டுள்ளது. துப்பாக்கிக்கொள்ளையர்கள், சங்கக்கடைகளில் கொள்ளை மேற்கொண்டு வருவதையடுத்தே இந்நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது.

இப்பொலிஸ் குழு, சங்கக்கடைகள் உள்ள பகுதிகளில் ரோந்துசுற்றுவதுடன், சங்கக்கடைச் சூழலில் சந்தேகத்துக்கிடமான முறையில் நிற்பவர்களையும் கண்காணித்துவரும். (உ)

ரமலான் சிந்தனைகள்

''இந்த மாதம் (ரமலான்) உங்களிடம் விஜயம் செய்திருக்கிறது. இதில் ஓர் இரவு (லைலது கத்ர்) அமைந்துள்ளது. அது ஆயிரம் மாதங்களைவிடச் சிறந்தது. அந்த இரவின் பயனை இழந்துவிடுபவர் சகல பாக்கியங்களையும் இழந்தவராவார். துர்ப்பாக்கியசாலிதான் அந்த இரவின் பயன்களை இழப்பர்.

அறிவிப்பவர்:.
ஹஜ்ரத் அனஸ் (ரலி)
நூல்:- இபுனுமாஜா.

கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

சின்னத்தம்பி தங்கலிங்கம்,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.
வழக்காளி

இல. ஈடு 241

எதிராக
இளையதம்பி கந்தையா,
புன்னாலைக்கட்டுவன் வடக்கு, புன்னாலைக்கட்டுவன்.
எதிராளி

மல்லாகம் மாவட்ட நீதிமன்றத்தின் M B/241ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக்கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 31-ந் திகதி (31-8-1978) வியாழக்கிழமை முற்பகல் பத்து மணியளவில் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் என்னால் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

முதல் வட்டி ரூபா 2968/-ம் (24-7-1974) தொடக்கம் 4-3-1977 வரைக்கும் ரூபா 2000/-க்கு 9 வீத வட்டியும் அதன்பின் முழுத்தொகைக்கும் இறுக்கும்வரை 5 வீத வட்டியும் கோட்டுச்செலவு ரூபா 664/95 செலவில் ரூபா 125/- கொடுபட்டது. இன்னும் 16-10-77ல் ரூபா 2400/- கொடுபட்டுள்ளது. இவ்விரு தொகையும் கழிக்கப்படல் வேண்டும்.

ஆதன விபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் மாவட்டம் வலிகாமம் வடக்குப்பகுதி மல்லாகம் கோவிற்பற்று புன்னாலைக்கட்டுவன் இறை அற்பை நிலப்பரப்பு 5½ வடலிகளும் எல்லை கிழக்கு பொன்னம்பலம் பெண் நல்லம்மாவின் ஆதனம், வடக்கு எதிராளிக்கும் சிவஞானசுந்தரம் பெண் தங்கேஸ்வரிக்குமுரிய ஆதனங்கள் மேற்கு முத்துப்பிள்ளை வைத்திலிங்கத்துக்கும் சகோதரன் காசிப்பிள்ளைக்குமுரிய ஆதனம், தெற்கு பொன்னம்பலம் சின்னத்தம்பியின் உரிமைக்காரரின் ஆதனம். இதடங்கலும்.

க சிவஸ்கந்தா,
நீதிமன்ற் விற்பனை ஆணையாளரும்
மதிப்பாளரும்.

நாசேந்திரமடம்,
வட்டுக்கோட்டை.

0173

கோட்டு விற்பனவு விளம்பரம்

மல்லாகம் மாவட்ட நீதிமன்றம்

வழ இல: M B/698
விநாயர் ஆறுப்பிள்ளை,
கொல்லன்கலட்டி, தெல்லிப்பழை
வழக்காளி

எதிராக
செல்லர் வீரவாகுவும் பெண்
நல்லம்மாவும் இருவரும்
பலாலி, காங்கேசன்துறை.
எதிராளி

மல்லாகம் டிஸ்திறிக் கோட்டில் M B/698ம் இலக்க வழக்கில் எனக்குக் கிடைத்த கோட்டுக் கட்டளைப்படி பின்னால் விபரிக்கப்படும் ஒரு துண்டுக் காணியை 1978-ம் ஆண்டு புரட்டாசி மாதம் 26-ந் திகதி (26-9-78) செவ்வாய்க்கிழமை காலை 10-30 மணி தொடக்கம் அந்தக் காணிக்குள் நின்று பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

தீர்வைத்தொகை

மேற்குறித்த எதிராளிகள் குறித்த வழக்காளிகளுக்கு ரூபா 4085/-வும் மேலும் 3000/-க்கு வருடமொன்றுக்கு நூற்றுக்கு 14 வட்டி வீதம் வழக்கு அணைத்த திகதியாகிய 1975-ம் ஆண்டு வைகாசி மாதம் 29-ந் திகதியிலிருந்து தீர்வைத் திகதியாகிய 1976-ம் ஆண்டு ஐப்பசி மாதம் 18-ந் திகதி வரையுமான வட்டியும் அதன்பின் தீர்வை முழுத்தொகைக்கும் இறுக்கப்படும்வரை சட்ட வட்டியான வருடமொன்றுக்கு நூற்றுக்கு 5 வீத வட்டியும் வழக்குச்செலவு ரூபா 564-50 கொடுக்கவேண்டியிருப்பதாலும்.

ஆதனவிபரம்

வடமாகாணம் யாழ்ப்பாணம் டிஸ்திறிக் வாலிகாமம் வடக்குப்பகுதி மயிலிட்டிக் கோவிற்பற்று பலாலி இறை ''வயலுயரம்'' நிலப்பரப்பு ஒன்றரை (1½)யும் வீடும் தென்னைகளும் கிணறும் எல்லை கிழக்கு மூத்ததம்பி கந்தையாவின் ஆதனம் வடக்கு சுந்தர் சபாபதியினுதனம் மேற்கு றேட்டு, தெற்கு மூத்தன் நாகமணியின் ஆதனம்.

சி செ பாலசிங்கம்,
கொமிஷனரும் விலைமதிப்பாளரும்.

அராலி வடக்கு,
வட்டுக்கோட்டை,
21-8-78.

0148

''4-ம், 5-ம் தர அதிபர்களின்

சம்பள முரண்பாடுகளுக்கு தகுந்த தீர்வு வேண்டும்''

அதிபர்கள் சங்கத்தலைவர்வற்புறுத்து

(தெல்லிப்பழை)

''உதவி ஆசிரியரிலும் குறைந்த சம்பளம் பெறும் 4-ம் 5-ம் தர அதிபர்களின் சம்பளத்தை திருத்தி அமைப்பது சம்பந்தமாக கல்வி மந்திரி திரு. நிஸங்கவிஜயரத்ன நடவடிக்கை எடுக்கும் இச்சமயத்தில் ஆசிரிய சங்கங்களின் சம்மேளனம் கூடி ஆலோசனை வழங்குதல் மீண்டும் முரண்பாடு ஏற்படாமல் இருக்க உதவியாயிருக்கும்''

தெல்லிப்பழை யூனியன் கல்லூரியில் நடைபெற்ற யாழ்மாவட்ட அதிபர்கள் கூட்டத்தில் இலங்கை வித்தியாலய தமிழ்அதிபர்சங்க யாழ்மாவட்டத்தலைவர் திரு. பொ. கனகரத்தினம் பேசுகையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார். அவர்மேலும் பேசுகையில்இன வாரியகஅமைக்கப்பட்டுள்ள சிங்கள, தமிழ், முஸ்லிம் அதிபர்கள் சங்கங்கள் சம்மேளனமாக நிறுவப்பட்டு ஒரே முகமாக கோரிக்கைகளை அனுப்புதல் வேண்டும். இன்றிருக்கும் அதிபர்தரங்களுக்கிடையிலுள்ள அதிகவித்தியாசம் நீக்கப்படல் வேண்டும். 4-ம் 5-ம் தரஅதிபர்கள் மாத்திரம் ஏனையதரங்களிலிருந்து அதிக வித்தியாசத்தில் பிரிக்கப்பட்டிருப்பது அடிப்படைக்கல்வி

(6ம் பக்கம் பார்க்க)

பின்னுறுதிக் கட்டளை பற்றிய அறிவித்தல்

மல்லாகம் மாவட்ட
நீதிமன்றம்

மாவிட்டபுரத்தைச் சேர்ந்த காலஞ்சென்ற கந்தப்பிள்ளை இராசரத்தினம் என்பவரின் மரண சாதனமில்லா மரணச் சொத்தினதும் உடமைப் பொருள்களினதும் விடயத்தில்

மரணமெய்தியவர்

1. சுப்பையா பரயோக லிங்கமும் பெண்
2. இராசலட்சுமியும் மாவிட்டபுரம்,

மனுதார்கள்

மரணசாதன நியாயாதிக்கம்
இல. T/8

எதிராக

1. கந்தப்பிள்ளை கைம் பெண் பத்தினிப்பிள்ளை
2. கந்தப்பிள்ளை மகள் சின்னத்தங்கச்சி
3. கந்தப்பிள்ளை மகள் செல்வமணி எல்லோரும் மாவிட்டபுரம்.

எதிர்வாதிகள்

மேலேயுள்ள இலக்கங் கொண்ட மரணசாதன வழக்குமேலே பெயர் குறிப்பிடப்பட்ட இறந்துபோனவரின் மரணசாதனமில்லா மரணச் சொத்தை நிர்வகிப்பதற்காக மேற்படி நீதிமன்றத்தில் தொடுக்கப்பட்டு அதில் அதற்கிணங்கப்பின்னுறுதிக் கட்டளை பதியப்பட்டுள்ளதென இத்தால் அறிவிக்கப்படுகிறது.

அக்கறையுள்ள ஆள் எவரும் 1978ம்ஆண்டுபுரட்டாதி மாதம் 1-ம் நாளன்று முற்பகல் 9 மணிக்கு இந்நீதிமன்றத்தின் முன்னர் தோன்றி அவ்வாறு பதியப்பட்ட பின்னுறுதிக்கட்டளை ஏன் முற்றுவதாக்கப்படலாகாதென்பதற்குக் காரணம் காட்டுமாறு இத்தால் தேவைப் படுத்தப்படுகின்றீர்?

நீதிமன்றக்கட்டளைப்படி
(ஒப்பம்)
றிச். ஜெயராஜசிங்கம்,
பதிவாளர்.

1978-ம் ஆண்டு வைகாசி மாதம் 19-ம் நாளன்று திகதியிடப்பட்டது.

தயாரித்தவர்;
ஒப்பம்
ம. சிதம்பரநாதன்,
மனுதார்களின்
சட்டத்தரணி.

0166

மானிப்பாய் பரிஸ்
பல நோக்குக்
கூட்டுறவுச் சங்கம்
மானிப்பாய்

பதவி வெற்றிடம்

மற்படி சங்கத்தின் நெசவு நிலையத்தில் வேலை செய்வதற்கு அனுபவம் உள்ளவர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. 8-9-78-ந் திகதிக்கு முன்பதாக பொது முகாமையாளர், மானிப்பாய் பரிஸ் பல நோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திகு விண்ணப்பிக்கவும்.

பொதுமுகாமையாளர்

0172

வெற்றுச்சாக்கு விற்பனை

வலிகாமம் கிழக்கு வட பகுதி பலநோக்கக் கூட்டுறவுச் சங்கத்தில் (அச்சுவேலி) தரம் பிரிக்கப்பட்ட சுமார் 5000 வெற்றுச் சாக்குகள் கேள்விப்பத்திரமூலம் விற்பனைக்குண்டு. இவற்றை 6-9-78-ம் தேதி புதன்கிழமைக்கு முன் கேள்விப்பத்திர முற்பணமாக 50 ரூபாவும் விண்ணப்பப் படிவத்திற்கு ரூபாய் 2/- மொத்தமாக 52/- ரூபாய் தலைமைக் காரியாலயத்தில் கட்டி விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம். விண்ணப்பங்கள் 8-9-78-ம் தேதி வெள்ளிக்கிழமைக்கு முன் பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு கேட்டுக்கொள்ளுகின்றேன். ரெண்டர் கடித இடது மூலையில் ''சாக்கு விண்ணப்பம்'' என்று பொறிக்கப்படுதல் வேண்டும்.

இங்ஙனம்
பொதுமுகாமையாளர்

0000

வரி விளம்பரம்

விற்பனைக்கு

குஞ்சுப்பரந்தன் சந்திக்கருகாமையில் நீர்ப்பாசன வசதியுள்ள 6 ஏக்கர் திறமான நெற்காணி உடனடியாக விற்பனைக்குண்டு. வே. தி. சம்பந்தர், கீதாஞ்சலி, டச்சு வீதி, சாவகச்சேரி. 0178

FOR SALE

Going Cheap — Belling 4 Burner, Oven, Grill & Timer, Contact: V. K. Rajaratnam, Stanley Road, Jaffna. 0177

விளம்பரம்

வவனியா வடக்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க கிராமிய வங்கியில் களவு போன நகைகளை முழுமையாக அடையாளம் காட்டியோர் களவு போன காலம தொடக்கம் 29-9-78 வரை வட்டி செலுத்தாமல் வங்கி வேலை நேரத்தில், வங்கி புனனிலையில் சமாதான நீதவான் அல்லது வழக்கறிஞரால் உறுதி செய்யப்பட்ட சத்தியவோலை சமர்ப்பித்து மீட்டுக்கொள்ளலாம்.

தலைவர்,
வவனியா வடக்கு
ப. நோ. கூ. சங்கம்.

நெடுங்கேணி,
26-8-78.

0175

மானிப்பாய் பரிஸ்
ப. நோ. கூ. சங்கம்,
மானிப்பாய்.

வெற்றுப் பரல்கள் விற்பனைக்கு உண்டு

மேற்படி சங்கத்தில் வெற்று பரல்கள் கேள்வி மூலம் விற்பனைக்கு உண்டு. வாங்க விரும்புவோர் 8-9-78-ந் திகதிக்கு முன்பாக பொது முகாமையாளர், மானிப்பாய் பரிஸ் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கம், மானிப்பாய் என்ற விலாசத்திற்கு தங்கள் கேள்விகளை அனுப்பி வைக்கவும். சங்க வேலை நேரங்களில் வெற்று பரல்களைப் பார்வையிடலாம்.

பொது முகாமையாளர்.

0171

முதலாண்டு நினைவாஞ்சலி

திரு. சு. சரவணமுத்து

தோற்றம் :
17-7-1901

மறைவு :
8-9-1977

முன்னைநாள் உரிமையாளர் ஆனந்தா அச்சகம், ஸ்தாபகர், திருமால் அச்சகம், 393, காங்கேசன் துறை வீதி, யாழ்ப்பாணம்.

மனைவி, மக்கள், மருமக்கள், பேரப்பிள்ளைகள்
முள்ளானை, இளவாலை.

0176

ஈழநாடு
The Eelanaadu

மிளகாய்க்கு மட்ட விலை

வடபகுதி விவசாயிகளின் பிரதான உற்பத்திப் பொருள்களான செத்தல் மிளகாய், ஈரவெங்காயம் ஆகியவைகளுக்கு மட்ட விலை நிர்ணயிப்பது பற்றி ஆராய்வதற்கு பிரதி வர்த்தக அமைச்சர் திரு. அமரசிறி யாழ்ப்பாணம் வரவிருக்கிறார்.

மிளகாய், வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதால் வடபகுதி விவசாயிகள் பெரிதும் பாதிக்கப்பட்டிருப்பதுடன் இந்த உபஉணவுப் பொருள்களின் உற்பத்தியில் அவர்கள் ஈடுபட முடியாத நிலையும் தோன்றியுள்ளது.

இதற்குப் பரிகாரம் காணப்படவேண்டுமென்றும் வெங்காயம், மிளகாய்க்கு உத்தரவாத விலை நிர்ணயிக்கப்படவேண்டும் அல்லது மட்ட விலை நிர்ணயிக்கப்படவேண்டுமென்றும் வடபகுதி எம். பிக்களும் மற்றும் விவசாய மன்றங்களும் கோரிக்கை விடுத்திருந்தன.

இதுசம்பந்தமாக மகாநாடு கூட்டி நிலைமையை நேரில் ஆராய்ந்து மட்ட விலை நிர்ணயிப்பதுபற்றி முடிவு எடுப்பதற்காக பிரதிவர்த்தக அமைச்சர் யாழ்ப்பாணத்துக்கு வரவிருக்கிறார்.

வடபகுதியில் மிளகாய், வெங்காயம் செய்கைபண்ணப்படும் நிலம் குறைவுதான். ஆனால் இங்கு இப்பொருள்களை உற்பத்தி செய்வதற்குச் செலவிடும் பணம் அதிகம்.

தென்னிலங்கை, மலைநாடுபோல ஆறும் நதிகளும் ஏரி குளங்களும் நிறைந்த பகுதியல்ல வடக்கு. வறண்ட பிரதேசமான வடக்கில் வாழும் விவசாயிகள் மிளகாயையோ மற்றும் விதைகளையோ தூவிவிட்டு வீட்டில் போய்ப் படுத்திருப்பவர்களல்லர்.

ஆழக்கிணறு தோண்டி அதிகாலை நாலு மணிக்கே துலாமிதித்துப் பட்டை பிடித்து நீர் இறைத்துத் தோட்டத்திலும் வயலிலும் வாழ்நாளைக் கழிப்பவன்தான் வடபகுதி விவசாயி.

எருவும், உரமும்போட்டு, மருந்து தெளித்து நாளொரு மேனியும் பொழுதொருவண்ணமுமாகக் கண்ணும் கருத்தும் வைத்துப் பயிர் வளர்த்துப் பயன்பெறுவதுடன் மற்றவர்க்கும் பயன் கொடுப்பவன் வடபகுதிக் கமக்காரன்.

இதனால் மிளகாய்க்கும் சின்னவெங்காயத்துக்கும் நாட்டின் இதர பகுதிகளிலுள்ளவர்கள் செலவிடுவதைப்போன்று மும்மடங்கு பணத்தை வடபகுதிக் கமக்காரன் செலவிடவேண்டியேற்படுகிறது.

இந்த உற்பத்திச் செலவைக் கருத்தில்கொண்டு வடபகுதி உற்பத்திப் பொருள்களுக்கு மட்டவிலை நிர்ணயிக்கப்படவேண்டியது அவசியம்.

ரெயில்வே

ஊழியர்களின் பென்சன் பணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ட்பாணப்பகுதி ரெயில்வேப்பகுதி ஊழியர்களுக்கான பென்சன் பணம் செப்டம்பர் மாதம் 7 ந் திகதி வழங்கப்படவிருக்கிறது. இத்தகவலை யாழ்ப்பாண ரெயில்வே பிரதான நிலைய பிரதம அதிகாரி திரு. ஜோன் தம்பிராசா அறிவித்துள்ளார்.

முன்பு அறிவித்ததன்படி அடுத்த மாதம் 8ம் திகதி வழங்கப்படவிருந்த பென்சன் பணம், அதற்கு முதல்நாளான 7ம் திக்தியே வழங்கப்படவிருக்கிறதாக அவர் தெரிவித்துள்ளார். (ஈ)

“சாதி ஒழிப்புக்கு எதிர்ப்பானால் கூட்டணியை விட்டு வெளியேறுக”

சாவகச்சேரி ‘நவம்’ கோரிக்கை

[யாழ்ப்பாணம்]

“தமிழர் விடுதலைக் கூட்டணியின் அங்கத்தவர்கள் எவராவது சாதி ஒழிப்புக் கொள்கைக்கு விரோதமாக இருந்தால் கூட்டணியிலிருந்து விலகிக்கொள்ளவேண்டும்” இவ்வாறு நேற்றுமுன்தினம் நடைபெற்ற தீண்டாமை ஒழிப்புக் குழு மாநாட்டில் சாவகச்சேரி எம். பி. திரு வி. என், நவரத்தினம் கூறினார்.

இம்மாநாடு யாழ். வீரசிங்கம் மண்டபத்தில் திரு. நவரத்தினம் தலைமையில் நடைபெற்றது. மாநாட்டுக்கு பெருந்தொகையானோர் பெண்களுட்படக் கலந்துகொண்டனர். அவர் தொடர்ந்து பேசுகையில் கூறியதாவது;-

உரிமையை மறுப்பதிலும் பார்க்க, அந்த உரிமையை நியாயமென்று உணர்ந்தும் அதைப் பின்போடுபவர்கள் மிகவும் கொடியவர்கள். இந்த அடிப்படையில்தான் கேட்கிறோம், தமிழர் விடுதலைக் கூட்டணி உறுப்பினர்கள் சாதி ஒழிப்புக்கு விரோதமாக இருந்தால் விலகிக்கொள்ளலாம். தமிழ் இனத்திற்கு அவமானமாக இருக்கும் களங்கத்தை உடனடியாக நீக்கவேண்டும்.

எதிர்க்கட்சித் தலைவர் திரு. அ. அமிர்தலிங்கம் பேசுகையில் கூறியதாவது!

“தமிழ் மக்களிடையேநிலவிவரும் சாதிப்பாகுபாடுகளைஒழிப்பதற்கு தமிழர்விடுதலைக்கூட்டணி இவ்வருடம் அக்டோபர் 2ந் திகதியை எல்லையாகக் கொண்டு நடவடிக்கை எடுத்து வருகின்றது. இந்த எல்லைக்குள் தமிழ் ஈழத்தில் சாதி வேற்றுமை இல்லை என்பதை திட்டவட்டமாக அறிவிப்பதன்மூலமே எமது சுதந்திரத்தை நாம் இலகுவாக அடையமுடியும்.

தீண்டாமையை ஒழித்தால் இலகுவில்சுதந்திரம்கிட்டும்

-- அமிர்

இன்று நாம் தீண்டாமையை ஒழிக்க முடிவுசெய்துவிட்டோம். இப்பணியினை அந்தந்தத் தொகுதி மூலக்கிளைகளே முன்னின்று நடாத்தவேண்டும். முடியாவிட்டால் எம். பி. க்களின் மட்டத்தில் நடவடிக்கை எடுக்கவேண்டும். அதுவும் முடியாவிட்டால் சட்டத்தின் உதவியுடன் செயல்படுத்தவேண்டும், சட்டத்தின் உதவியுடன் அதைச்செய்வதில் குற்றமில்லை.

தீண்டாமையை ஒழிப்பதானால் ஒவ்வொருதமிழ்க்குழந்தையும் தான் தமிழ்ச்சாதி என்ற ஒரே உணர்வுடன் இருக்கவேண்டும்.

நான் எனது மனைவி மக்களுக்கு அன்றுமுதல் இன்றுவரை சாதியின் பெயரால் எவரையும் அழைக்கக்கூடாதெனக் கட்டளையிட்டுள்ளேன் இதை சகலரும் கைக்கொள்ளவேண்டும்,

சந்ததியார் பேச்சு

திரு. சந்ததியார் உரையாற்றுகையில் கூறியதாவது:

“தீண்டாமையை இளைஞர் புரட்சித்தலைமுறையினால்தான் ஒழிக்கமுடியும், ஒவ்வொரு இளைஞனும், மனைவி, மக்கள், சொத்து என்ற வரம்புக்குள் இல்லாமல் தம்மை சமூகத்துக்கு அர்ப்பணிப்பதன்மூலம் இதனைச் செய்யமுடியும்.

தமிழ் இளைஞர் பேரவை, தீண்டாமையை ஒழித்துக்கட்டும் அடிப்படைக் கொள்கையை அத்திபாரமாகக் கொண்டு உருவாகியது. இளைஞர்கள் தம்மை இப்பணிக்கு அர்ப்பணிப்பதன்மூலம் தீண்டாமையை முறியடிக்கலாம்.

மாவை சேனாதி உரை

மாவை சேனாதிராஜா உரையாற்றுகையில் கூறியதாவது:-

“தமிழ் மக்களிடையே சிந்தனைப்புரட்சி ஒன்றின்மூலமே தீண்டாமையை முற்றாக ஒழிக்கமுடியும், தமிழ் மக்களிடையே ஒரு பகுதியினர் மூடப்பழக்கவழக்கங்களி[illegible] ஊறி தம்மைத் தீண்டத்தகாதவர்கள் என எண்ணி ஒதுங்கி வாழாமல். தமிழ்ஈழ எல்லையில் துணிச்சலுடன் குடியேறி தமிழ்மண்ணைக் காக்கத் தயாராகவேண்டும். அப்படியான நிலையில் எம்மிடையே ஒரு குவத் தொழில் செய்பவர்களாகவோ, தீண்டத்தகாத

(5-ம் பக்கம் பார்க்க)

‘தமிழ்மொழி பண்பாடு காக்க நாவலர் பலர் வேண்டும்’

பேராசிரியர் செல்வநாயகம் ஆவல்

(யாழ்ப்பாணம்)

“உலகில் வாழும் பல்வேறு மக்களோடு ஒப்பிட்டுப் பார்க்கும்பொழுது தமிழ்மக்கள் ஒருவகையில் தனிச்சிறப்புடையவர்கள். அவர்களது மேன்மைக்கும், புகழுக்கும் உலகளாவிய சிறப்பைப் பெற்ற அவர்களது மொழியும் பண்பாடுமே காரணமாகும். தமிழ்மொழியையும் தமிழர்பண்பாட்டையும் பேணிக்காக்க நாவலர்கள் பலர் தோன்ற வேண்டும்”.

இவ்வாறு புங்குடுதீவு கலைப் பெருமன்றத்தின் முதலாவது ஆண்டுவிழாவில் தலைமையுரை நிகழ்த்துகையில் யாழ், வளாகப் புவியியல்துறைத் தலைவர் பேராசிரியர் சோ. செல்வநாயகம் கூறினார்.

கலைப்பெருமன்றத்தின் நிகழ்ச்சிகள் அம்பலவாணர் அரங்கில் நடைபெற்றது.

மட்டக்களப்பு மேல் நீதிமன்ற நீதிபதி திரு. ரி. ஜே. இராஜரத்தினம், திருமதி அருள் இராஜரத்தினம் ஆகியோர் பிரதமவிருந்தினர்களாகக் கலந்துகொண்டனர். சங்கீத பூஷணம் க. தாமோதரம்பிள்ளை வரவேற்புரை நிகழ்த்தினார்.

காவலூர் எம். பி. பண்டிதர் கா. பொ. இரத்தினம் வாழ்த்துரை வழங்கினார்.

நாவலர் பலர் தோன்ற வேண்டும்

பேராசிரியர் செல்வநாயகம் தமதுரையில் மேலும் கூறியதாவது:

“இத்தகைய ஒரு பாரம்பரியம் தமிழ்மக்களுக்கு இருப்பது ஒரு பெரிய வாய்ப்பென்றே கருதவேண்டும், ஆனால் இன்றைய சூழ்நிலையில் எமதுநாட்டில் எமது தாய்மொழியையும் பண்பாட்டையும் பேணிக்காக்க ஆறுமுக நாவலரைப்போல் பலநாவலர்கள்தோன்ற வேண்டும்”.

பண்டைய தமிழகத்தில் முடியுடை மூவேந்தர்களும், குறுநிலமன்னர்களும் செந்தமிழ்ப்புலவர்களையும் பாணர்களையும் கூத்தர்களையும் இன்னோரன்ன பிற கலைஞர்களையும் ஆதரித்துப் போற்றி வந்தார்கள். இதனால் இயல், இசை நாடகமாம் முத்தமிழ்க் கலைகள் மட்டுமல்லாது, சிற்பக்கலை, கட்டடக்கலை, ஓவியக்கலை, ஆடைகள் ஆபரணங்கள் செய்தல் முதலான தொழில் முறைகள் எல்லாம் வளர்ச்சியடைந்தன. சங்கம் வைத்துத் தமிழ்வளர்த்த செம்மையைக் கூடலின் வரலாறுகூறும். வணிகத்தின் சிறப்பையும் தமிழரின் கலைகளின் சிறப்பையும் பூம்புகாரின் வரலாறு உணர்த்துகின்றது. “யாதும் ஊரே யாவரும்கேளிர்” என்றபரந்த இலட்சியத்தின் அடிப்படையில் அன்று தமிழ் மொழியும் தமிழரது கலைகளும் வணிகமும் வங்கமும் சினமும், கிரேக்க உரோம நாடுகளும் உட்பட்ட உலகளாவியநிலப்பகுதியில் சிறப்புப் பெற்றிருந்தன. இத்தகைய சிறப்புக்குத்தமிழ் மன்னர்களே காரணமாக இருந்தார்கள்.

இன்றும் இத்தகைய சூழ்நிலை

பிற்காலத்தில் நிலை மாறிவிட்டது. தமிழ்மன்னர்களின் ஆட்சி காலட்போக்கில் அழிந்தொழிய தமிழ்ப்புலவர்களும் கலைஞர்களும் ஆதரவற்றவராயினர். மேலைநாட்டாரின் ஆட்சிக் காலத்தில் தமிழ்மொழியின் வளர்ச்சிக்கோ பண்பாட்டின் வளர்ச்சிக்கோ ஆதரவு இருக்கவில்லை. இலங்கையில் வாழும் தமிழ் மக்களைப் பொறுத்தவரையில் இத்தகைய ஒரு சூழ்நிலை இன்றும் தொடர்ந்து நிலவிவிருகின்றது என்றே கூறவேண்டும்.

தமிழ்மொழியின் வளர்ச்சி காலப்போக்கில் பின்னடைய நேரிட்டதுமல்லாமல் தமிழ் மக்களின் பாரம்பரியமான கலைநுணுக்கங்களும் விரைவாக மறையத் தொடங்கின. இலங்கை, இந்தியா போன்ற நாடுகளில் பாரம்பரியமான பல கலைகள் அருகி வருவதைக் கண்டு கலாயோகி ஆனந்தக் குமாரசாமியவர்கள் பெரிதும் கவலையுற்றார்கள். இன்றைய நிலையில் ஈழத்தில் வாழும் தமிழ்மக்களின் மொழியையும் பண்பாட்டையும் பேணிக்காக்க வேண்டிய ஒரு பெரும் பணி இருக்கின்றது.

அன்னியர் ஆட்சிக்காலத்தில் தமிழ்மொழியும் தமிழர் பண்பாடும் அழிந்துவிடாதவாறு பேணிக்காத்தவர் ஆறுமுகநாவலர் ஆவர். இன்றைய சூழ்நிலையில் தமிழ்மொழியையும் தமிழர் பண்பாட்டையும் பேணிக்காக்க ஆறுமுகநாவலரைப் போன்று பல நாவலர்கள் தோன்றவேண்டும்” என்றார்.

கலைப்பெருமன்றத்தின் முக்கிய நிகழ்ச்சியாக திருச்சி ஏ. கே. சி. நடராஜனின் கிளாரினெட் கச்சேரி இடம்பெற்றது. திரு. சின்னக்கிருஷ்ணன் உடன் வாசித்தார்.

[4-ம் பக்கம் பார்க்க]

மணிவிளக்கு

தொல்லைதரும் சுற்றம், தனக்கடங்காத மனைவி அடக்கமில்லாத வேலையாள், அறிவற்றமகன், நஞ்சுடைமை கூடிய அயலான் இவ்வைந்தும் கொடிய நோய்கள்.

—சிறுபஞ்சமூலம்



நல்லூர்க் கந்தன்

நலமாக வாழ்விப்பான் !

தில்லையிலே நித்தநித்தந் தேவர் போற்றத்
திகழைந்து தொழில்களையே யுஞற்றுகின்ற
எல்லையிலாப் பரம்பொருளினையோன் கந்தன்
உற்பவித்தான் பொய்கையிலே அன்றுதொட்டு
முல்லைவனம் காடுமலை ஆறுதாண்டி
முடிவில்லா வின்பங்களீந்து சாக்க
நல்லை நகர் வந்தமர்ந்தான் நம்மை என்றும்
நலமாக வாழ்விப்பான் நம்புவோமே

அமிழ்தென்றே போற்றுகின்ற அரியயாப்பு
அனைத்துந் தேனருவியென வறிஞர் போற்றத்
திகழ்புவியிற் செம்மையறம் யாவும்கூட்டும்
தித்திப்போ வதனோடு தெவிட்டாஇன்பம்
புகழாரம் பல்வழியும் பெற்றேநித்தம்
பொன்னணங்கு என்றே பெயரிட்டுவைத்த
தமிழ்த்தாயை யெமக்கிங்கு தாயாய்க்கொள்ள
தவறின்றி யாக்கிவைத்தாய் சரணந்தாளே!

-- எழினி சி. சிவநாதபிள்ளை

“இன,மத,சாதி வேறுபாடின்றி நாட்டுயர்வுக்கு உழைப்போம்

முதல்வர் எம்.ஜி.ஆர். வேண்டுகோள்

மதுரை, ஆக. 28

“நாட்டு மக்கள் ஜாதி, மத, இனவேறுபாடுகளை மறந்து நாட்டு முன்னேற்றம் ஒன்றையே கருத்திற் கொண்டு செயற்பட வேண்டும்.”

இவ்வாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரன் கேட்டுக் கொண்டுள்ளார்.

மதுரைக்கு அருகே 25 கோடி ரூபா செலவில் அமைக்கப்பட்டுள்ள சுருளியாறு நீர் மின்சார, உற்பத்தி நிலையத்தை ஆரம்பித்துவைத்துப பேசுகையிலேயே முதல்வர் இவ்வேண்டுகோளை மக்களுக்கு விடுத்தார்.

அனைவருக்கும் பயன்கிட்ட வேண்டும்

திரு. எம். ஜி ஆர். மேலும் கூறியதாவது;- அனைத்து மக்களதும் ஒத்துழைப்பால உருவாகிய இந்நிலையம் அனைவருக்குமே பயன்படவேண்டும். 6 கோடி ரூபா செலவில் முடியுமென எதிர்பார்க்கப்பட்ட இத்திட்டத்திற்கு 25 கோடி ரூபா செலவாகியிருக்கிறது.

காலதாமதமே இவ் வீண செலவுகளுக்கு காரணமாகும்.

முன்னதாகவே நிதி ஒதுக்கீடு

ஒரு திட்டத்தை அமைப்பதற்குத் தேவையான நிதி ஒதுக்கீட்டை முதலிலேயே செய்து விடுவதால் இவ்வித வீண் செலவைத் தவிர்க்கலாம், என்றார். 5000 பேருக்கு வீடமைப்புப் பத்திரங்களையும் திரு எம். ஜி ஆர் வழங்கினார்.

அமைச்சர்கள் செல்வி பி. ரி. பரஸ்வதி, சுப்புலஷ்மி முதலானோரும் பேசினர். (உ)

எம்-ஜி-ஆருக்குக்கறுப்புக்கொடி:

தடியடி நடக்கவில்லை: பொலிசார் மறுப்பு

மதுரை, ஆக. 28

மதுரை உசிலம்பட்டியில் தமிழ்நாடு முதலமைச்சர் திரு. எம். ஜி. இராமச்சந்திரனுக்கு கறுப்புக்கொடி ஆர்ப்பாட்டம் நடந்தபோது கல்வீச்சு, தடியடிப் பிரயோகம் எதுவும் நடக்கவில்லை என்று பொலிசார் மறுப்புத தெரிவித்துள்ளனர்.

இந்த ஆர்ப்பாட்டத்தின் போது தடியடிப் பிரயோகம் நடைபெற்றதாக முன்னர் வந்த செய்தி தெரிவித்திருந்தது.

சுருளியாறு நீர்மின்சார உற்பத்தித் திட்டத்தை ஆரம்பித்துவைக்க முதல்வர் வரும் வழியில் இச்சம்பவம் நடந்தது.

மதுரைப் பல்கலைக்கழகத்திற்கு காமராஜரது பெயரை தமிழக அரசு சூட்டியதற்கு எதிர்ப்புத் தெரிவித்தே இந்த ஆர்ப்பாட்டம் நடைபெற்றதாகத் தெரிவிக்கப்பட்டது.

பார்வார்ட பிளாக் சட்சியைச் சேர்ந்தவர்களென கூறப்படும் ஆர்ப்பாட்டக்காரர்கள் 147 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

முன்னெச்சரிக்கையாக 48 பேர்முன்னதாக வேகைதுசெய்யப்பட்டிருந்தனர். (உ)

“ஜனதா அரசு காலத்தை அவமாக்குகிறது”

சென்னையில் இந்திரா கண்டனம்

சென்னை, ஆக. 28

“ஜனதாகட்சி அரசாங்கம் உருப்படியான பொருளாதாரத் திட்டம் எதையும் செயற்படுத்தாமல் அனவசியமான பிரச்னைகளில் எல்லாம் காலத்தை வீணுக்குகிறது.”

இவ்வாறு முன்னாள் பாரத பிரதமர் திருமதி இந்திரா காந்தி சென்னையில் காங்கிரஸ் ஊழியர்கள் மத்தியில் பேசுகையில்கூறினார். அவர் மேலும் பேசுகையில் “மக்களுக்கு பணி செய்து, விலைவாசிகளை குறைக்க வேண்டியது அரசின் கடமை. ஆனால் இது நடைபெறவில்லை. உட்பூசல் முதலயனவற்றால் அரசு காலத்தை பயனற்றதாக்கி வருகிறது.

காங்கிரஸ் ஊழியர்கள் மக்கள் பணியாற்றுவதனை முழு முதற்கடமையாக்க வேண்டும்” என்றார். (உ)

கி. அ. சங்கங்கள் புனரமைப்பு

(வண்ணார்பண்ணை)

கிராம அபிவிருத்திச் சங்கங்கள், மாதர் முன்னேற்றச் சங்கங்கள் ஆகியன யாழ். மாவட்டத்தில் புனரமைப்புச் செய்யப்பட்டுவருகின்றன. கிராமங்களின் அபிவிருத்தி வேலைகளை முன்னிட்டு அரசாங்கம் எடுத்த நடவடிக்கைகளின் மீது இச்சங்கங்கள் புனரமைக்கப்படுகின்றன.

இதுவரை இயங்கிவந்த சங்கங்களினதும், இயங்காதிருந்த சங்கங்களினதும் புனரமைப்புக் கூட்டங்கள் ஒவ்வொரு கிராமங்கள் தோறும் நடைபெற்றுவருகின்றன. யாழ். மாவட்டத்தில் உள்ள ஒவ்

[5-ம் பக்கம் பார்க்க]

“அடிப்படை உரிமைகளை பாதுகாக்க நான் தயார்”

ஐ. நா செயலாளர் மீண்டும் வலியுறுத்து

லண்டன், ஆக, 28

அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதற்குத் தாம் தயாராக இருப்பதாக ஐ. நா. பொதுச் செயலாளர் கலாநிதி வால்ட்ஹெய்ம் மீண்டும் தெரிவித்துள்ளார்.

ஒஸ்ட்ரியாவில் நடைபெற்ற ராஜதந்திரிகளின் கருத்தரங்கு ஒன்றில் உரையாற்றுகையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

அங்கத்துவ நாடுகளிடையே ஏற்படும் கருத்துவேற்றுமைகளால் ஐ. நா. ஆணைக்குழுவினால் பிரச்னைகளுக்கு சுமுகத் தீர்வு காண்பதில் சிக்கல் ஏற்படுகிறது என்றும் அவர் இக்கருத்தரங்கில் உரையாற்றுகையில் குறிப்பிட்டார். (உ)

எண்ணூர் படகு விபத்து!

தலா 5000 ரூபா நிதியுதவி தமிழகஅரசு அளிக்கிறது

சென்னை, ஆக. 28

சென்னைக்கு அருகே எண்ணூரில் நடந்த படகுவிபத்தில் மாண்ட 15 மாணவர்களின் குடும்பங்களுக்கும் தலா 5000ரூபா நிதியுதவி வழங்குமாறு தமிழ்நாடு முதலமைச்சர் திரு எம ஜி. ஆர் அதிகாரிகளுக்குப் பணித்துள்ளார்.

இறந்தவர் குடும்பங்களுக்கு கட்சி சார்பில் தலா 2500ரூபா வழங்குவதாக அனைத்திந்திய அண்ணா திராவிடமுன்னேற்றக்கழகம் அறிவித்துள்ளது.

32 பேர் பயணம்செய்த இப்படகு நடுக்கடலில் கவிழ்ந்ததென்பது தெரிந்ததே (உ)

ரொடீஷியாவில் யுத்தம் மூளக்கூடிய நிலை

பிரி. வெளிநாட்டமைச்சர் எச்சரிக்கை

லண்டன், ஆக. 28

ரொடீஷியாவில் இவ்வாண்டுக்குள் உள்நாட்டு யுத்தம் மூளக்கூடிய சூழ்நிலை உருவாகி உள்ளது என்று பிரிட்டிஷ் வெளிநாட்டமைச்சர் கலாநிதி டேவிட் ஓகன் தெரிவித்துள்ளார்.

தொலைக்காட்சியில் உரையாற்றுகையில் அவர் இவ்வாறு சொன்னார்.

வெள்ளையருக்கும் கறுப்பருக்கும் இடையேயான பேச்சுவார்த்தைகளில் சமரஸத்தீர்வு ஏற்படாதபட்சத்தில் யுத்தம் மூளுவது தவிர்க்க முடியாததாகிவிடும் என்றார் அவர்.

தேசியவாதத் தலைவர்களும் தம் நிலையை மாற்றிக்கொள்ள வேண்டும் என்றும் கலாநிதி ஓகன் தெரிவித்தார். (உ)

தமிழ்மொழி...

(3-ம பக்கத் தொடர்ச்சி)

திரு. சின்னராசா, திரு. கணேசபிள்ளை ஆகியோர் தவில் வாசித்தனர். கச்சேரி முடிந்ததும் நீதிபதி திரு, ரி. ஜே. இராசரத்தினம திரு. நடராஜனுக்குத் தங்கப்பதக்கம் அணிந்து பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார். ஏனையஇசைவல்லுநரும்பொன்னாடை போர்த்துக் கௌரவிக்கப்பட்டார்கள்.

இதனைத் தொடர்ந்து திரு. சி. இ. ச [illegible], திரு. நா. க. மயில்வாகனம், திரு. வி. இராமநாதன்ஆகியோரை பேரவைஉறுப்பினர் பண்டிதர் கா. பொ. இரத்தினம், வித்துவான் ஆறுமுகம், சங்கீத பூஷணம் தாமோதரம்பிள்ளை ஆகியோர் முறையே பாராட்டிப் பொன்னாடை போர்த்திக் கௌரவித்தார்கள். இதனையடுத்து திருமதி கல்யாணி சுந்தரலிங்கத்தின் மாணவிகளின் பரதநாட்டியமும், சங்கீதபூஷணம் பொன் சுபாஸ சந்திரன் குழுவினரின் இசைக்கச்சேரியும், நாடகநிகழ்ச்சியும் இடம்பெற்றன. (உ)

வைத்தியசாலையில் மருந்துக்குத் தட்டுப்பாடு

(கிளிநொச்சி நிருபர்)

கிளிநொச்சி வைத்தியசாலையில் முக்கியமான மருந்துகளுக்குப் பெருந்தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. இதனால் பொதுமக்கள் பெரிதும் கஷ்டத்திற்குள்ளாகவேண்டியுள்ளது. இதனால் நோயாளர் தனியார் டிஸ்பென்சரிகளையே நாடவேண்டியுள்ளது. (அ)

நூல்கள் கொள்வனவு

[பருத்தித்துறை]

புலோலிக் கிராமசபை மத்திய நூல்நிலையத்திற்கு இரண்டாயிரம் ரூபா பெறுமதியான நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளது.

இக்கிராமசபையின் விசேட ஆணையாளரான திரு. வி. வேலும்மயிலுவின் உத்தரவின் பேரில் இந்நூல்கள் கொள்வனவு செய்யப்பட்டுள்ளன. (க)

ம. கி. சமரஸ் மாநாடு:

சமரஸத்திட்டத்தில் புதிய மாற்றம் எதுவும் இல்லை

இஸ்ரேலியப் பிரதமர் அறிவிப்பு

டெல்அவிவ், ஆக. 28

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் சமரசப்பேச்சுவார்த்தைகளின் போது தாம் தமது சமரசத்திட்டத்தில் புதியமாற்றம் எதையும் கொண்டுவரப் போவதில்லையென்று இஸ்ரேலியப் பிரதமர் திரு. பெகின் அறிவித்துள்ளார்.

ஜெருஸலத்தில் வைத்து இதனை அவர் அறிவித்தார்.

திரு. பெகினுடன் இஸ்ரேலிய வெளிநாட்டமைச்சர் திரு. மோஷ தயான், பாதுகாப்பு அமைச்சர் திரு. வைஸ்மன் ஆகியோரும் சமரசப் பேச்சுவார்த்தைகளின் போது கலந்துகொள்வர்.

அமெரிக்க ஜனாதிபதி திரு. ஜிம்மி கார்ட்டர் ஏற்பாடு செய்துள்ள இம்மாநாட்டில் எகிப்திய ஜனாதிபதி ஜனாப் அன்வர் சதாத்தும் கலந்துகொள்கிறார் என்பது தெரிந்ததே.

இம்மாநாடு செப்டெம்பர் மாதம் 5ம் திகதிநடைபெறும். (உ)

கி. அ. ...

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

வொரு பிரிவு உதவி அரசாங்க அதிபர்கள் பகுதிகளிலும் அவ்வப்பகுதிக் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் இப்புனரமைப்புக் கூட்டங்களை நடத்துவதில் ஈடுபட்டுள்ளனர். இதுவரை பதிவு செய்யப்படாத சங்கங்களைப் பதிவு செய்வதற்கான நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டுவருகின்றன. (அ)

Rio (Jaffna)
Phone: 7607
Daily 4 Shows
KARATE
AMAZONS
From: 1-9-78
FRIDAY FOSTER
(adults only)

வெஸ்லி
(மானிப்பாய்)
தினசரி 6-30, 9-30
எம். ஜி. ஆர்.
அரசகட்டளை

நாகம்ஸ்
(சுன்னாகம்)
தினசரி 6-45, 10-00
சிவகுமார் - சுஜாதா
அன்னக்கிளி

REGAL Jaffna 3rd CROWDED WEEK
Phone: 360
Daily 4-30, 7-00,& 9-30p.m. only
Sophia Loren - Burt Lancaster - Richard Harris
in
THE CASSANDRA CROSSING
All passes and Concessions Suspended

வெலிங்டன் (யாழ். நகர்)
தினசரி 3 காட்சிகள்
சனி, ஞாயிறு 4 காட்சிகள்
வீட்டு மாப்பிள்ளை
(புதிய பிரதி)

லிடோ
(யாழ். நகர்)
போன்: 7698 தினசரி 4 காட்சிகள்
தீர்க்க சுமங்கலி

வின்ஸர்
(யாழ்ப்பாணம்)
போன்: 466 தினசரி 4 காட்சிகள்
முத்துராமன்-சுஜாதா-சௌகார்ஜானகி-சுந்தரராஜன்
நடித்த
பேரும் புகழும்

ராஜா
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
கமலஹாசன்-ரஜனி-ஆலம்
சுதா-வை.விஜயா
கடைசி வாரம்
நடித்த
மன்மத லீலை
(ஈஸ்ட்மன் கலர்)

மனோகரா
(யாழ்ப்பாணம்)
தினசரி 4 காட்சிகள்
எம். ஜி. ஆர். - சாவித்திரி
வீரப்பா - எம். என். ராஜம் - சந்திரபாபு
நடித்த
மகாதேவி
[புத்தம் புதிய பிரதி]

ராணி
(யாழ். நகர்)
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி-மஞ்சுளா
நடித்த
உத்தமன்
(ஈஸ்ட்மன் கலர்)

ஸ்ரீதர்
(யாழ்ப்பாணம்) கடைசி 3 தினங்கள்
தினசரி 4 காட்சிகள்
சிவாஜி—பத்மினி
நடித்த
இருமலர்கள்
(புதியபிரதி)

கிளிநொச்சிச் செய்திக் கடிதம்:

வளரவேண்டிய கிளிநொச்சி பிற்போக்காயிருப்பதேன்?

கிளிநொச்சி ஒரு முக்கியமானதும் வளர்ச்சியடைய வேண்டியதுமான ஒரு பிரதேசமாகும். ஆனால் தட்டிக் கேட்கவேண்டியவர்கள பெட்டிப்பாம்பாய்ச் சுருண்டு கிடப்பதனால் கிளிநொச்சியின் செயற்பாடுகள் முடங்கிக் கிடக்கின்றன. திட்டமிட்டதும்எதிர்கால எதிர்பார்பனவுமற்ற செயற்பாடுகள் கிளிநொச்சியின் வளர்ச்சியைத் தாமதப்படுத்துவதோடல்லாமல் பொதுமக்களுக்குத் தொல்லைகளைத் தந்துகொண்டிருக்கின்றன. பொர்துமக்களின் அன்றாட தேவைக்கு பாவனைக்கு உரியவைகள் ஆகிய வைத்தியசாலை,சந்தை, பஸ்நிலையம் போக்குவரத்து போன்றவை மிகவும் சீர்கேடான நிலையில் இருக்கின்றன. இவை இத்தகைய நிலையில் இருப்பதற்கு இப்பிரதேசத்திலுள்ள மக்கள் மத்தியில் கிளிநாச்சி மக்கள் தாம் என்ற எண்ணமில்லை என்பது என் அபிப்பிராயம். அண்மைக்கால வரலாற்றிருந்து தொடங்கிய ஒரு குடியேற்றத் திட்டந்தான் கிளிநொச்சி! இத்தகைய பிரதேசத்தின் வயதை ஏறக்குறைய 45 வருடங்கள் எனலாம் இவ்வளவு வயதையுடைய பிரதேசத்தில் ஒரு தரமான கல்லூரி ஒன்றில்லை. இப்படியாகக் கிளிநொச்சியின் சீர்கேடுகளையும் குறைபாடுகளையும் அடுக்கிக் கொண்டே போகலாம்.

கிளிநொச்சித் தொகுதியின் பாதைகள் பிரசித்தமானவை அதிலும் உருத்திரபுரம்,இராமநாதபுரம், பாதைகள நடந்துபோகவே முடியாதவை. அவை காலா காலமாக அவ்வப்பகுதி மக்களால் சுட்டிக் காட்டப்பட்டும் ஒன்றும் செய்யா நிலையில் மேலும் மேலும் மோசமாகி வருகின்றன. பாதைகளின் சீர்கேட்டினாலும் போதியளவு பஸ் வண்டிகள் இல்லாத காரணத்தாலும் உள்ள வண்டிகளை நம்பி ஏறிக்கொள்ள முடியாத துரதிஷ்ட நிலைமையாலும் இப்பகுதியின் போக்குவரத்து மிகவும் சீர்கேடானதொன்றாகவே உள்ளது. இதனால் மக்களின் அன்றாடத் தேவைகள் பாதிக்கப்படுகின்றன. தமது உற்பத்திப் பொருட்களை உடனுக்குடன் விற்பனை செய்து கொள்ளவோ- சந்தைப்படுத்தவோ முடியாத நிலையில் இருக்கிறார்கள்.

கிளிநொச்சி அண்மைக் காலங்களில் திடீரென்ற சனத்தொகை அதிகரிப்பைக் கண்டுளளது. இதனால் தற்போதைய சந்தை போதுமானதாகவில்லை. மக்கள புகையிரத நிலைய வீதியில் கடும் வெய்யிலில் காயவேண்டிய துர்ப்பாக்கிய நிலையைக் காணக்கூடியதாயுளளது.

வெயிலில் ஒருபகுதி காய்வதோடல்லாமல், புகையிரத நிலைய வீதியை அவர்கள் ஆக்கிரமித்துக் கொண்டதனால் பாதசாரிகள்பாடு பெருங்கஷ்டமாயுள்ளது. இதே வேளையில்தான் 'நவீன சந்தை' என்ற ஒன்று வெறிச்சோடிப்போய்க்கிடக்கிறது. கடந்த தேர்தலின்போது, பலத்த கண்டனங்களுக்கும், கேலிப் பேச்சுக்கும் ஆளான இந் நவீன சந்தை, குறிப்பிட்ட சில காலங்களாக அகதி முகாமாக இருந்து, தற்போது மலசலகூடமாயும் மாறியுள்ளது. எனவே தற்போதைய சந்தையையோ, நவீன சந்தையையோ கவனிப்பார் யாருமில்லை எனலாம். ஆனால் வரி அறவிடுபவர்கள் படுத்தும் தொல்லைகள் கொஞ்சநஞ்சம் அல்ல. வாசற் காவலாளியிடமிருந்து ஒரு மாதிரியாகச் சமாளித்துக்கொண்டு போனாலும், போலித் தராசு வியாபாரிகளிடமிருந்து தப்பமுடியாதிருக்கின்றது. இவ்வாறு மக்கள (விவசாயிகள்) படும்பாடு கொஞ்சமன்று.

இக்குறைகளைச்சுட்டிக்காட்டி நிவாரணம் தேடுவதுதான் எனது நோக்கம் என்பதையும் இங்கு தெரிவித்துக்கொள்கிறேன்.

தீண்டாமை...

[3-ம் பக்கத் தொடர்ச்சி]

வர்களாகவோ எவரும் இருக்கமாட்டார்கள்.''

மங்கையர்க்கரசி கருத்து

திருமதி . மங்கையர்க்கரசி அமிர்தலிங்கம் உரையாற்றுகையில் கூறியதாவது:-

''தீண்டாமையை ஒழிக்க மகளிர் பேரவை செயல்பட்டு வருகிறது. எமது நடவடிக்கையாக சகல சமூகங்களையும் உள்ளடக்கிய 10 வயதுக்குட்பட்ட பஜனைக் குழுவினரை அமைக்கவுள்ளோம். இக்குழுவை சகலதொகுதிகளிலும் நிறுவும்பட்சத்தில் இதன் மூலம் சகல குழந்தைகளும் சமத்துவத்துடன் பழக வாய்ப்புண்டாகும்.

தீண்டாமையை ஒழிப்பது அரசியலல்ல, எனவே சகல தலைவர்களின் முழுக் குடும்பங்களும் இதில் ஈடுபட்டு தமிரிடையே ஒருசாதிதான் உண்டென்பதை நிலைநாட்டவேண்டும்'' என்றார்.

வண்ணை ஆனந்தன் பேச்சு

திரு, வண்ணை ஆனந்தன் பேசுகையில் கூறியதாவது:-

தீண்டாமையை ஒழிப்பதற்கு நாம் சமயப்பணிகள் செய்யும் நல்லை ஆதீன குருபரமாச்சாரியசுவாமிகள், தங்கம்மா அப்பாக்குட்டி ஆகியோரிடம் சென்று தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் ஆலயங்களில் சமய பிரசாரங்களை செய்யவேண்டாமென வற்புறுத்தவேண்டும். அவர்கள்மூலம் இதுகுறித்து அறிக்கைகள் விடவேண்டும்.

இந்தியாவிலிருந்து இலங்கை வரும் கலைஞர்கள் கச்சேரிசெய்யும்போது தீண்டாமையைப் பற்றி பிரசாரம் செய்வதற்கும், தீண்டாமையைக் கடைப்பிடிக்கும் ஆலயங்களில் கச்சேரி செய்வதை நிறுத்தவும் நடவடிக்கை எடுக்கவேண்டும் என்றார்.

மாநாட்டில் உடுப்பிட்டி எம். பி. திரு. த. ராஜலிங்கம், கோவை மகேசன் உட்பட மற்றும் பலர் உரையாற்றினர். (கெ-இ)

இன்றைய இராசிப்பலன்

ஆவணி மாதம் 13-ந் திகதி
செவ்வாய்க்கிழமை
(29-8-78)

மேடம்:- உழைப்பினால் முன்னேற்றம் எற்படும், வியாபாரத்துறையில் விருத்தியுண்டு, தாய்வழிப் பொருள் வரவுக்கும் இடமுண்டு, உயர் கல்வியில் ஈடுபடுவோர்க்கு உற்சாகதினம்.

இடபம்:- குறுக்குவழித் தலையீடு உங்கள் கோபத்தைக் கிளறி விடும், திடீர் நடவடிக்கை மேற்கொள்வதன்மூலம் நீங்கள் வருந்த நேரிடலாம், மேலதிகாரிகளுடன் பகைத்துக்கொள்ள வேண்டாம்.

மிதுனம்:- இன்னலின் பின்னல் உங்கள் முன்னேற்றத்தைத் தடுக்கும், இதயபாரம் வேதனைப்படுத்தும், அமைதி நன்று.

கடகம்:- பிரச்னைகள் பல இன்று நல்ல முடிவை ஏற்படுத்தும், குடும்பத்தில் மகிழ்ச்சி நிலவும், பேச்சில் நிதானம் பெருமையைத் தரும்.

சிங்கம்:- புதிய துறையில் ஈடுபடுவீர்கள், வியாபாரிகளுக்கு நல்ல முன்னேற்றம் உண்டு, புதிய முதலீடுகளுக்கு சிறப்பான தினம். சிலருக்கு புதுமனை கட்டும் ஆர்வம் பிறக்கலாம், நல்லதினம்.

கன்னி:- கல்வித்துறையில் நல்ல முன்னேற்றம் காணப்படும். ஆசிரியர்களுக்குப் புகழ் குவியும், சிலர் வாழ்க்கையில் புதியவாகனம் ஒன்றும் கொள்வனவு செய்யப்படலாம்.

துலாம்:- வாழ்க்கை இன்று அமைதியாகச் செல்லும், எண்ணம்போல் யாவும் நடக்கும், உறவினர்களின் ஆதரவு தாராளமாகக் கிடைக்கும், அரசியலிலும் பிரகாசிக்க இடமுண்டு.

விருச்சிகம்:- சிறிய விடயங்கூட இன்று சிரமமாகத் தோன்றும், உள்வீட்டிலேயே பூசல்கள் தலைதூக்கும், வாய்வுப் பதார்த்தங்களைத் தவிர்த்துக் கொள்ளவும், திருப்தியற்ற தினம்.

தனுசு:- களஸ்திரவழியால் மகிழ்ச்சிகரமான சம்பவம் இடம் பெறும், நீண்டநாள் பகை இன்று நிவர்த்தியாவதற்கு இடமுண்டு, காதலர்கள் வாழ்க்கையில் பிணைப்புக்கள் இறுகும்.

மகரம்:- சிந்தையில் குழப்பநிலை தோன்றக்கூடும், மனைவியின் உடல்நிலை சிறிது கவலையைத் தரலாம், செலவினங்கள அளவுக்கு மிஞ்சியதாகவே இருக்கும், சிலர் கடன் படவும் நேரிடலாம், தெய்வ நம்பிக்கை நன்று.

கும்பம்:- உயர்ந்த எண்ணங்கள் உங்களைப் புகழின் உச்சத்திற்கு அழைத்துச் செல்லும், தெய்வ வழிபாட்டில் அதிக ஆர்வம் பிறக்கும், கால்நடை விருத்திக்கும் இடமேற்பட முடியும்.

மீனம்:- கடமையில் முதலிடம் கிடைக்கும், பதவியில் உயர்வுக்கும் இடமுண்டு, உணவு விடுதி நடத்துபவர்களுக்கு உற்சாகமான தினம், வியாபாரத்துறையில் தொடர்புகள் பெருகும்.

சோதிடக்கலாநிதி
திருமலை க. வேலுப்பிள்ளை

“நாடகத்தில் யந்திர உதவி கலைத்துறையைப்பாதிக்கும்”

(வண்ணார்பண்ணை)

''யந்திரக் கருவிகளின் துணையை நம்பி நாடகங்கள் மேடையேற்றப் படுவதால் நாடகக்கலையின் புனிதம், அதன் சிறப்பு, கலைஞர்களின் வளர்ச்சி பாதிக்கப்படுகின்றது. இதைக் கலைஞர்கள், நடிகர்கள் மறந்து செயற்படுவதால் நர்டகத்தின் சிறப்புகள் அழிந்துவிடும்'' என்று மண்டைதீவு கவிக்குயில்நாடக மன்றத்தின் ஆதரவில் நடந்த நாடகவிழாவில் கலந்துகொர்ண்டு உரையாற்றிய திரைப்பட நடிகரும், யாழ். பிரதேச நாடகமன்ற உறுப்பினருமான ஆசிரியர் திரு. தர்மலிங்கம் குறிப்பிட்டார்.

மண்டைதீவு சிறுப்புலம் திறந்தவெளி மைதானத்தில் திரு. வீ. சோமசுந்தரம் தலைமையில் நடந்த இந் நாடக விழாவில் மண்டைதீவு அறிவொளி நாடகமன்றம், கவிக்குயில் நாடகமன்றம்ஆகியவற்றின் நாடகங்கள் மேடையேற்றப்பட்டன.

மண்டைதீவு இளங்குரல் நாடகமன்றச் செயலாளர் திரு. கே. எஸ். இராசலிங்கத்தின் வரவேற்புரையுடன்ஆரம்பமான இவ்விழாவில் மண்டைதீவு மறுமலர்ச்சி இயக்கச் செயலாளர் திரு. எஸ். பாலசிங்கம் பேசுகையில் ''நாடகமன்றங்கள் நாட்டின் நற்பணிகளுக்கும் நல்லொழுக்கத்திற்கும் வழிகாட்டிகளாக இயங்க வேண்டும். மேடையில் நடிப்பதற்காகவும், மட்டரகமான சினிமா ரசிகர்களைத்திருப்திப்படுத்தி நடிகர் என்ற பெயரை பெறுவதற்காகவும் நாடகங்களை மேடையேற்றுவதை எமது இளைஞர்கள் தவிர்த்து நாட்டின் கிராமத்தின் சமூக பொருளாதார தேவைகளுக்கு உதவும் வகையில் நாடகங்களை

(6-ம் பக்கம் பார்க்க)

"கலாச்சாரத் தொடர்பு மூலம் இனஇணைப்பு ஏற்படும்"

- அமைச்சர் விஜயதுங்க

[யாழ்ப்பாணம்]

இரு சமுகத்திற்குமிடையில் இருந்து வந்த இணைப்பை, சமீபகாலமாக சில சக்திகள் முறியடிக்க முயற்சித்து வருகின்றன. இரு சமுகத்திற்கிடையிலான இணைப்பு கலாச்சார பண்பாடு தொடர்புகள் மூலம் இத்திய சக்திகளையும் கடந்து மேலும் இணைப்பை பலப்படுத்தும்.

யாழ்ப்பாணம் சாந்தி படமாளிகையில், திரைப்பட விழாவை ஆரம்பித்து வைத்துப் பேசிய, தகவல் ஒலிபரப்பு அமைச்சர் திரு. விஜேதுங்கா மேற்கண்டவாறு கூறினார்.

அமைச்சர் விஜேதுங்கா மேலும் கூறியதாவது: நான் யாழ்ப்பாணத்திற்கு புதியவனல்ல முன்பு 1953-ம் ஆண்டு உள்நாட்டு அமைச்சர் இரத்தினாயக்காவுடன் கலை நிகழ்ச்சியொன்றுக்கு வந்திருக்கிறேன். பல்லாண்டுக்குபின் இன்றுதான் கலாச்சார விழாவிற்கு வந்திருப்பது பொருத்தமுடையதாகும். இன்று உலக கலாச்சாரம் நாளுக்குநாள் மாற்றமடைந்து வருகின்றது. பழைய காலத்தில் தனிப்பட்ட சமுதாயத்திற்கு தனிப்பட்ட கலாச்சாரம் இருந்து வந்தது. இன்று கலை கலாச்சாரம் பலதரப்பட்ட மக்களை ஒன்றுபடுத்துவதாக அமைந்துள்ளது, கலாச்சார துறையை விளக்க திரைப்படம் சிறந்த கருவியாக இருக்கிறது. பலதரப்பட்ட மக்களின் கலை, கலாச்சாரங்களை காண்பதற்கு திரைப்படம் உதவுகின்றது. மொழி இனம், சமயம் போன்ற பல எல்லைகளையும் கடந்து திரைப்படம் விளங்குகிறது.

தமிழ், சிங்கள, மேல்நாட்டு படங்களை கொண்டதாக இந்த நிகழ்ச்சி இருக்கிறது. இதுவே சிறந்த திரைப்பட விழாவிற்கு தகுந்தமுறையாகும். பல தரப்பட்ட மக்களின் கலாச்சாரங்களையும் எடுத்துக் காட்டும் முறையாகும்.

மக்கள் பரஸ்பரம் நல்லெண்ணத்துடன் ஒற்றுமையாக வாழ பல வழிகளில் திரைப் படங்கள் உதவி புரிகின்றன.

செயலாளர் பேச்சு

அமைச்சு செயலாளர் திரு. சரத் அமுனுகம கூறியதாவது: இங்கு மட்டுமல்ல தெற்கிலுள்ள இளைஞர்களும் நாடகம் திரைப்படம் தயாரிக்க முன்வந்துள்ளனர். நாடக திரைப்பட துறையில் முன்னுக்கு வர விரும்பும் எவருக்கும் நாம் உதவிசெய்யத் தயாராக இருக்கின்றோம். இன்றுள்ள இளைஞர்களின் முன்னேற்றத்திற்கு திரைப்படம் முக்கியமாகும். இளைஞர்களின் எதிர்கால எண்ணச்சிதறல்களை சினிமா மூலம் வெளிக்காட்டலாம். சமூகம், மொழி, இனம், சமயம் என்ற வேறுபாட்டை திரைப்படம் நீக்குகிறது.

வடக்கு, தெற்கிலுள்ள இளைஞர்கள், கலாசாரரீதியில், தங்கள் கருத்துக்களை பரஸ்பரம் அறிந்துகொள்வது அவசியமாகும்.

மண்டைதீவில் வானொலி ஒலிபரப்பு ஸ்ரூடியோ ஒன்று அமைப்பதற்கு அமைச்சர் சம்மதம் தெரிவித்துள்ளார். உள்ளூர் கலைஞர்கள் கொழும்பிற்கு செல்லாமல், இங்கிருந்தே தங்கள் நிகழ்ச்சிகளை செய்ய வசதிசெய்யப்படும். தற்போது தமிழ்நிகழ்ச்சி தெளிவாகக் கேட்பதுபோல, ஆங்கில சிங்கள நிகழ்ச்சியும் தெளிவாககேட்க வழிசெய்யயபடும். இதற்காக மண்டைதீவு நிலையத்தில் புதிய யந்திரங்கள் இணைககப்பட விருக்கிறது. இதற்கு முதற்படியாக இந்த திரைப்படவிழா அமைந்துள்ளது. ஒற்றுமைப்பாதையில் வேறுபாடின்றி முன்னேறிச் செல்ல உங்கள் ஒத்துழைப்புத் தேவை.

அரசாங்க அதிபர் திரு. லயனல்பெர்னாண்டோ கூறியதாவது: இன்று பல சமூகங்களுக்கிடையே ஒரு இணைப்பை ஏற்படுத்தும் சிறந்த நாளாகும். இந்த நாள் திரைப்படச் சரித்திரத்தில் பொன்எழுத்துக்களால் பொறிக்கப்பட வேண்டிய நாளாகும்.

பலதரப்பட்ட கலாச்சார நோக்கங்களுடன், தமிழ், சிங்கள, மேல்நாட்டுப் படங்கள் இவ்விழாவில் இடம் பெற்றுள்ளது. எந்தவித கலையும் கலாச்சாரமும் தனிப்பட்ட நர்ட்டிற்கோ, இனத்திற்கோ சொந்தமானதல்ல. கர்நாடக சங்கீதத்தை எவரும் கேட்டு ரசிக்கமுடியும். (க)

நாடகத்தில்...

[5-ம் பக்கத் தொடர்ச்சி]

பயன்படுத்தவேண்டும்'' என்றார்.

தேவையற்ற உணர்ச்சிவசப் படுத்தும் நிகழ்ச்சிகளால் மட்டும் நாடகங்களை அமைக்காது நல்லொழுக்கம், சேவை உணர்வு, சீர்திருத்த சிந்தனைகளை மக்களிடத்திற் புகுத்தக் கூடிய கருத்துக்கள், கதைகள் நாடகங்களில் இடம்பெறுவதே நாடகமன்றங்கள் செய்யவேண்டிய நற்பணியாகும்'' என்றார்.

குருநகர் நாடகமன்றத்தைச் சேர்ந்த கலையரசன் திரு. வி. எம். ஜெராட், திரு. வே. இராசரத்தினம், கவிஞர் திரு க. அமிர்தலிங்கம் உட்பட இளங்கலைஞர் திரு.ச. ஜெயக்குமார் மற்றும் பலர் உரையாற்றினர். (அ)

சம்பள...

[2-ம் பக்கத் தொடர்ச்சி[

வளர்ச்சிக்குப் பொறுப்பாகவிருக்கும் அதிபர்களைப்புண்படுத்தும் செயலாகும். சம்பள முரண்பாடு ஏற்பட்ட காலத்திலிருந்து திருத்தப்படும் சம்பளம் தாமதமின்றி வழங்கப்படல் வேண்டும்'' என்றார்.

''ஐந்தாம்தர அதிபர்களின் சம்பளம் முரண்பாடடைந்த காலத்திலிருந்து 4-ம் 5-ம் தரஅதிபர்கள் ஒரேதரமாக்கப்பட்டு தொடக்கச்சம்பளம் 540 ரூபாவுக்குக்குறையாமலும் 8 படி உயர்ச்சிகளுக்கு மேற்படாத உச்சசம்பளமும் அமைய சம்பளம் வழங்கப்படவேண்டும்''.

''ஒரேதரமாக்கப்பட்ட 4-ம் 5-ம் தர அதிபர்கள் யாவரும் விரைவில் மூன்றும் தரமாக உயர்த்தப்படுவதோடு 4-ம் 5-ம் தரங்கள் ஒழிக்கப்படவேண்டும்''. ஆகிய தீர்மானங்களும் நிறைவேற்றப் பட்டுகல்விமந்திரிக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

நிர்வாகிகளாகப் பின்வருவோர் தெரிவு செய்யப்பட்டனர்.

தலைவர் பொ. சனகாந்தினம் உபதலைவர்கள் ச. கைலாயபிள்ளை வே. தனபாலசிங்கம் காரியதரிசி க. கந்தையா உபகாரியதரிசி க. சோமசுந்தரம் தனாதிகாரி சூ. அந்தோனிப்பிள்ளை. (ச)

நல்லூருக்காக விசேட மின் இயந்திரம்

(யாழ்பபாணம்)

வடபகுதி மின்சாரசபையின் பிரதம பொறியியலாளர் திரு. எஸ். சிவதாசனினதும் ஏனைய மின் முகாரிகளினதும் தீவிர முயற்சி காரணமாக கொழும்பு மின்சார தலைமைக் காரியாலயத்திலிருந்து விசேஷ மின்சார இயந்திரம் ஒன்று நல்லூர் கந்தசுவாமி ஆலய திருவிழாவுக்காக அனுப்பி வைக்கப்பட்டுள்ளது. பராமரிப்பு வேலைகளை இலங்கை மின்சார சபை யாழ். டிப்போ மின் முகாரிகளிடம் சபை ஒப்படைத்துள்ளது. அவர்களது தீவிரமுயற்சியால்ஆலயமருங்கு நன்கு மின்னொளி யூட்டப்பட்டுள்ளது. (இ)

பீலிக்ஸின்...

[1-ம் பக்கத் தொடர்ச்சி]

திரு. ஸ்டான்லி திலகரத்தினா ஆகியோர் எம்மைச் சந்தித்து எமது முடிவை மாற்றுமாறு வற்புறுத்தினர். நாம் அதற்கு மறுத்துவிட்டு அங்கிருந்து வெளியேறினோம். அப்போதைய சட்டமாஅதிபர் திரு. விக்டர் தென்னக்கோனும் அங்கிருந்தார். ஆனால் அவர் எதுவும் கூறவில்லை.

தொலைபேசியில் பயமுறுத்தல்

அன்று இரவு அப்போதைய விவசாயக் காணி அமைச்சரும என்னோடு சட்டக்கல்லூரியில் கல்வி கற்றவருமான திரு. கொப்பேகடுவ என்னுடன் தொலைபேசியில் [தொடர்பு கொண்டார். பத்திரிகை மன்றச்சட்ட மூலம் தொடர்பான தீர்ப்பை கூடன் வழங்குமாறும் இல்லாவிடின் பதவியிலிருந்து விலகுமாறும் அவர் என்னைத் தொலைபேசியில் பயமுறுத்தினார், திரு. கொப்பேகடுவ தாமாகவே இதைக் கூறியிருக்க மாட்டார். திரு. பீலிக்ஸின் தூண்டுதலின் பேரிலேயே அவர் என்னைப் பயமுறுத்தினார் என நான் உணர்ந்து கொண்டேன்;

ஜனாதிபதியிடம் முறையிட்டேன்

மறுநாள் ஜனாதிபதி திரு. வில்லியம் கோபல்லாவிடம் எம்மை முதல் நாள் தொலைபேசியில் ராஜினாமாச் செய்யுமாறு பயமுறுத்தியது பற்றி முறையிட 'நீங்கள் ராஜினாமாச் செய்வது நல்லது' என்றே கூறினார்.

நேற்றைய விசாரணையின் போது அரசுதரப்பு சிரேஷ்ட சட்டத்தரணியான திரு. ஏ. சி. டி, சொய்சா அரசியல் அமைப்பு நீதியரசர்களின் செயல் தொர்டர்பாக அப்போதைய பிரதி அமைச்சர் திரு ரத்னதேசப்பிரிய சேனநாயக்கா தேசிய அரசுப் பேரவையில் நிகழ்த்திய உரையின் பிரதியை கமிஷன் முன்னிலையில் சமர்ப்பித்தார்.

அரசியல் அமைப்பு நீதியரசர்கள் மூடத்தனமான நடவடிக்கையில் ஈடுபட்டு வருகிறார்கள் என்றும் பதவியிலிருந்து விலக்கப்படக் கூடிய வழிகளை அவர்கள் செய்கிறார்கள் என்றும் திரு. சேனநாயக்கா அப்போதைய பேரவையில் குறிப்பிடப்பட்டிருந்தார் என திரு. சொய்சா அதை கமிஷன் முன் வாசித்துக்காட்டினார். (ம-இ)

கிளிநொச்சி பஸ் சேவையில் செப்டம்பர் முதல் மாற்றம்

(கிளிநொச்சி)

கிளிநொச்சி பஸ் சேவையில் அடுத்தமாதம் முதல் பல புதிய மாற்றங்கள் செய்யப் படவிருப்பதாக கிளிநொச்சி டிப்போ உயர் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

உருத்திரபுரத்திலிருந்து கிளிநொச்சிக்கும், இரணைமடுவிலிருந்து கிளிநொச்சிக்கும் இதுவரை சேவையில் ஈடுபடுத்தப் படும் பஸ்கள் செப்டம்பர் மாதம் முதல் உருத்திரபுரத்திலிருந்துகிளிநொசிக்கு நேரடியாகச் சேவையிலீடுபடுத்தப்படும். மணித்தியாலத்திற்கு ஒரு பஸ்வீதம் உருத்திரபுரத்திலிருந்தும் இரணைமடுவிலிருந்தும் சேவையில் ஈடுபடும்.

கிளிநொச்சியிலிருந்து திருவையாறு ஊடாக இராமநாதபுரம் செல்லும் பஸ்கள் செப்டம்பர் முதல் கிளிநொச்சியிலிருந்து புறப்பட்டு கரடிப்போக்குச் சந்தி, மெர்சன் வீதி யூடாக இரணைமடுவரை சேவையில் ஈடுபடும்.

அத்துடன் கண்டாவளையிலிருந்து தொண்டமானாறு க்கும் புதிய பஸ்சேவை ஒன்று ஆரம்பிக்கப்படவுள்ளது.

இப்பஸ் கண்டாவளையிலிருந்து புறப்பட்டு பரந்தன் ஊடாகக் கிளிநொச்சிக்குச் சென்று திரும்பி பரந்தன், ஆனையிறவு, புத்தூர் ஊடாக செல்லச் சந்நிதியைச் சென்றடையும். காலை 8 மணிக்கும் மாலை 2-15க்கும் இப் பஸ்கள் கிளிநொச்சியிலிருந்து புறப்படும். (இ)

நல்லூரில் நாளை மாம்பழத் திருவிழா

[யாழ்ப்பாணம[

நல்லூர் கந்தசுவாமி கோயிலில் நாளை காலை 7-30 மணிக்கு ஸ்ரீ தண்டாயுதபாணி உற்சவம் [மாம்பழத் திருவிழா] நடைபெறுகிறது.

இவர்களுக்கு 'அமிர்' உறுதி

(மாவிட்டபுரம்)

அரசகருமமொழித் தேர்ச்சியின்மை காரணமாக பாதிக்கப்பட்ட விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்களது நிலை குறித்து ஜனாதிபதி திரு. ஜே.ஆர்.ஜெயவர்த்தனவுடன் கலந்துபேசி நிவாரணம்பெற்றுத்தருவதாக எதிர்க்கட்சித் தலைவரும், தமிழர் விடுதலைக் கூட்டணி செயலதிபருமான திரு. அ. அமிர்தலிங்கம் உறுதியளித்துள்ளார்.

வடமாகாண விவசாய விஸ்தரிப்பு சேவையாளர் சங்க செயலாளர் திரு. இ. காசிநாதன் மற்றும் கா. கந்தசாமி, நா.கணேசு, மு. கணபதிப்பிள்ளை ஆகியோர் கொண்ட தூதுக்குழு ஒன்று திரு. அமிர்தலிங்கத்தைச் சந்தித்து அரசகருமமொழித் தேர்ச்யின்மையால் விவசாய விஸ்தரிப்பு சேவையாளர்கள் பலர் வேலைநீக்கம் செய்யப் பட்டுள்ளதையும் மேலும் பலர் பாதிப்புக்குள்ளாகியுள்ளதையும் சுட்டிக்காட்டியது. அப்போதே அவர் மேற்கண்டவாறு உறுதியளித்தார். (அ)

சமஷ்டிக்...

(1ம் பகக்த் தொடர்ச்சி)

இலங்கை சிறிய நாடு அதைப்பிரிக்கமுடியாது

இலங்கை மிகவும் சிறிய நாடு. அதனை எவரும் பிரிக்க முடியாது. நாடு பிரிந்தால் யாழ்ப்பாணத்திலுள்ள பௌத்த இடங்கள் எல்லாம் அழிந்துவிடும். அதற்காகவே பிரிவினை குறித்து பயப்படுகிறேன்.

குமாருக்கு வாக்களித்தேன்

தமிழர் விடுதலைக் கூட்டணியின் தனிநாட்டுக் கொள்கைக்கு நான் முற்றிலும் எதிர்ப்பானவன், எனவே தான் கடந்த தேர்தலில் ஐக்கிய இலங்கையை விரும்பும் திரு குமார் பொன்னம்பலத்திற்கு வாக்களித்தேன்,]ம-இ]

சகல...

[1-ம் பக்கத்தொடர்ச்சி]

அணிசேர்ந்து முன்னேற்ற சக்திகளுடன் கைகோர்த்து முன்னேறும் தளபதியாக விளங்குகின்றார்.

அறிவு, அஞ்சாமை, நேர்மை ஆகிய மூன்று குணங்களிலும் திரு. அமிர்தலிங்கம சிறந்து விளங்குகின்றார். தமிழர் விடுதலைக் கூட்டணியிலும சரி, தமிழ் மக்களிடையேயும சரி, அவர் கிங்கமபோல் விளங்குகின்றார்.

தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால வரலாற்று நூலை வெளியிட்டு உரையாற்றிய கோப்பாய் எம். பி. திரு. எஸ். கதிரவேலுப்பிள்ளை கூறியதாவது;

''தமிழரசுக்கட்சியின் ஆரம்பகால கொள்கையின் அடிப்படையில் உருவாகியதே தமிழர் விடுதலைக் கூட்டணியாகும். இந்த வரலாற்று நூலில் கட்சியின் வரலாற்று சாதனைகள் இடம்பெற்றுள்ளன.

திருவாளர்கள் திரு. கே. துரைரத்தினம், திரு. வி. யோகேஸ்வரன், காசிஆனந்தன், எஸ். கே. மகேந்திரன் உட்பட பலர் உரையாற்றினர். [கெ-இ)

துப்பாக்கிகளை மீளப்பெறலாம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சிப் பொலிஸ்நிலையத்தில் கிளிநொச்சிப் பகுதி மக்களால் ஒப்படைக்கப்பட்ட துப்பாக்கிகளை மீண்டும் பெற்றுக்கொள்ளுமாறு கிளிநொச்சிப் பொலிஸ்நிலையப் பொறுப்பதிகாரி திரு. வராகொட சகலருக்கும் தெரிவித்துள்ளார்.

உறுதிப்பத்திரம் உள்ள காணிகளை வைத்திருப்போருக்கு மாத்திரமே மேற்படி துப்பாக்கிகள் திரும்பவும் வழங்கப்படவுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (அ)

கிளிநொச்சி முருகன் உற்சவம்

(உருத்திரபுரம்)

கிளிநொச்சிக் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவம் அடுத்த மாதம் 7ந் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகவிருக்கிறது. தொடர்ந்து 10 தினங்கள் உற்சவம் நடைபெறும்.

15ந் திகதி ரதோற்சவமும் மறுநாள் தீர்த்தோற்சவமும் 17ந் திகதி பூங்காவன உற்சவமும் நிகழும்.

இவ்வுற்சவ தினங்களில் தினமும் மாலை 7 மணி தொடக்கம் 'ஆத்மஜோதி' ஆசிரியர் திரு. நா. முத்தையா ''கந்தரனுபூதி'' என்னும் பொருள்பற்றி விரிவுரை நிகழ்த்துவார். (அ)

இப்பத்திரிகை ஈழநாடு' லிமிடெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன் கோவில் மேற்குவீதி 63-ம் இலக்கத்திலுள்ள அச்சகத்தில் 1978-ம் ஆண்டு ஆகஸ்ட் மாதம் 29-ந் திகதி அச்சிட்டு வெளியிடப்பட்டது.

The Eelanaadu Post Box No: 49, Telegram Eelanaadu, elephone [illegible] - Registered as a Newspaper in SriLanka